## மலாய்க்காரர்கள் மடானி கோட்பாட்டினைப்

# புரிந்துகொள்ளவில்லையா?



கோலாலம்பூர், ஆக. 18-

மடானி கோட்பாடு மலாய் வாக்காளர்களைக் கவர்ந்திழுப்பதில் பயன் அளிக்கவில்லை என்ற ஆரூடத்தைப் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் மறுத்துள்ளார். அந்தக் கோட்பாட்டினைப் புரிந்துகொள்வதற்கு மலாய்க்காரர்களுக்கு இன்னும் கால அவகாசம் தேவை.

மேலும் இன, மத விவகாரங்களால் மலாய்க்காரர்களை இலகுவாகக் கவர்ந்திழுக்க முடியும் எனக் கூறி அவர்களை அடிக்கடி குற்றஞ்சாட்டுவதையும் பிரதமர் மறுத்துள்ளார். அதேபோல் சீனர்களைப் பயமுறுத்தவும் ஒருசில தரப்பினர் இன, மத விவகாரங்களைப் பயன்படுத்துவதை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என நேற்று மடானி பரிவு குடியிருப்புக் கட்டுமானத் திட்டத்தின் அடிக்கல்நாட்டு விழாவில் கலந்துகொண்ட

### பிரதமர் மறுப்பு

அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக 6 மாநில சட்டமன்றத் தேர்தல்களில் மலாய் வாக்காளர்களைக் கவர்ந்திழுப்பதில் மலேசிய மடானி வியூகங்கள் பயன் அளிக்கவில்லை என எழுந்த குற்றச்சாட்டு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பிரதமர் மேற்கண்ட தகவல்களைப் பகிர்ந்தார்.

இதற்கு முன்னதாக கெடா, திரெங்கானு, கிளாந்தான், சிலாங்கூர், பினாங்கு, நெகிரி செம்பிலான் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த 39 விழுக்காட்டு மலாய்க்காரர்கள்தாம் இன்னமும் ஒற்றுமை அரசாங்கம் அறிமுகப்படுத்திய மடானி கோட்பாட்டினைப் புரிந்துகொள்ளவில்லை என ஹில்ஹாம் செண்டர் எனப்படும் சுயேச்சை ஆய்வு மையம் நடத்திய ஆய்வில் கூறப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.






## கைரி நிகழ்ச்சியில் பங்கேற்க

# டிஎம்ஜே விருப்பம்

கோலாலம்பூர், ஆக. 18-

சுகாதாரத்துறை முன்னாள் அமைச்சர் கைரி ஜமாலுடின் நடத்திவரும் 'Keluar Sekejap' நிகழ்ச்சியில் பங்கேற்பதற்கான ஆவலைத் தெரிவித்துள்ளார் ஜோகூர் மாநில பட்டத்து இளவரசர் துங்கு இஸ்மாயில் சுல்தான் இப்ராஹிம்.

அந்த நிகழ்ச்சியின் அதிகாரப்பூர்வ அகப்பக்கத்தின் வாயிலாக இளவரசர் தமது ஆவலை வெளிப்படுத்தியுள்ளார். அந்நிகழ்ச்சியின் புதிய பகுதிக்கான பதிவில் இளவரசர் கருத்துப் பதிவேற்றம் செய்துள்ளார்.

என்னையும் இந்த நிகழ்ச்சிக்கு அழைப்பீர். எந்தவொரு தணிக்கையும் இடம்பெறாது நாட்டை அதிரச் செய்வோம் எனக் குறிப்பிட்டு கைரி ஜமாலுடினை டேக் செய்துள்ளார். அந்தப் புதிய பகுதியில் கைரி ஜமாலுடினும் ஷாரில் ஹம்டானும் இணைந்து மாநில சட்டமன்றத் தேர்தல்கள் குறித்து பேசியுள்ளனர்.

ஒரு நிமிடம் ஓடக்கூடிய அந்தக் காணொளியில் சிறப்புப் பிரமுகராக ஜசெகவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஓங் கியான் மிங் கலந்துகொண்டார். அவர் ஒவ்வொரு மாநிலத்திலும் வாக்குச் செலுத்த வந்தோரின் எண்ணிக்கையைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

குறிப்பாக இதர 5 மாநிலங்களைக் காட்டிலும் கெடா மாநிலத்தில் வாக்குச் செலுத்த வந்தோரின் எண்ணிக்கை 2 விழுக்காடு அதிகரித்திருப்பது அதிர்ச்சி அளிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த 15ஆவது பொதுத்தேர்தலில் கெடா மாநிலத்தில் 71.7 விழுக்காட்டினர் வாக்குச் செலுத்திய நிலையில் இந்த சட்டமன்றத் தேர்தலில் அம்மாநிலத்தில் 73.3 விழுக்காட்டினர் வாக்குச்செலுத்தி இருப்பதாக ஓங் கியான் மிங் கூறியிருக்கிறார்.

இதற்கிடையே இளவரசர் பதிவிட்ட கருத்தினை கைரி ஜமாலுடின் தமது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

## நகர்ப்புறங்களில் குறைந்த வருமானம் பெறுவோருக்கு

# இன்னும் அதிகமான குடியிருப்புகள்

## அரசாங்கம் பரிந்துரை



கோலாலம்பூர், ஆக. 18-

குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு குறிப்பாக நகர்ப்புறங்களில் இன்னும் அதிகமான குடியிருப்புக் கட்டுமானத் திட்டங்களை மேற்கொள்ளும்படி வீடமைப்பு மேம்பாட்டாளர் தரப்பினருக்குப் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளதாகப் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தெரிவித்தார்.

தேசிய முன்னேற்ற நீரோட்டத்தில் குறைந்த வருமானம் பெறுபவர்களைப் புறக்கணிக்கக்கூடாது. கூட்டரசுப் பிரதேசம் குறிப்பாக கோலாலம்பூர் அழகிய கட்டடங்கள், வசதிகள், குடியிருப்புகள், ஹோட்டல்கள், உணவகங்கள் ஆகிய அம்சங்களைக் கொண்டு முன்னேற்றப் பாதையில் வலுப்படுத்த வேண்டும். காரணம் அதுவே ஒரு முன்னேற்றம் கண்ட நகருக்கான அறிகுறி.

பரிவுமிக்க மடானி தலைநகரம் என்ற தனித்துவமும் இருப்பது அவசியம். அதில் குறைந்த வருமானம் பெறும் தரப்பினர் உள்ளிட்ட மக்கள் யாரும் முன்னேற்றப் பயணத்தில் புறக்கணிக்கப்படக்கூடாது.

எனவே அரசாங்கத்துடன் இணைந்து தனியார் துறையினருக்கும் இந்தச் செயல்பாட்டில் முக்கியப் பொறுப்புள்ளது. குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கும் வீடுகள் கிடைப்பதற்கு ஏற்ற வீடமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவது அவசியம் என நேற்று மடானி பரிவு குடியிருப்புக் கட்டுமானத் திட்டத்திற்கான அடிக்கல்நாட்டு விழாவில் கலந்துகொண்ட அவர் குறிப்பிட்டார்.

GM KLANG

## சுதந்திர தினத்தை முன்னிட்டு

# ஜிஎம் கிள்ளானின் பிரத்தியேக விற்பனைப் பிரச்சாரம்

கிள்ளான், ஆக. 18-

இவ்வாண்டு சுதந்திர தினம், மலேசிய தினக் கொண்டாட்டங்களை மேலும் விமரிசையாக்க ஜிஎம் கிள்ளான் மொத்த விற்பனை மையம் 'Malaysia, Rumah Kita! 2023 - Istimewa 66' எனும் விற்பனைப் பிரச்சாரத்தை ஏற்பாடு செய்துள்ளது.

மலேசிய மடானி: நம்பிக்கையைப் பூர்த்திசெய்யும் ஒற்றுமை முன்னெடுப்பு என்ற தேசியத் தினக் கோட்பாட்டிற்கு ஏற்றவாறு இந்த விற்பனைப் பிரச்சார நிகழ்ச்சி நடைபெற வுள்ளது.

செப்டம்பர் 2, 3ஆம் தேதிகளில் நடைபெறும் இந்த நிகழ்ச்சி நடைபெறும். பல இன - மதங்களைச் சேர்ந்த அதன் வாடிக்கையாளர்களுக்கு பன்முகத்தன்மையும் ஒற்றுமையையும் கோட்பாடாகக் கொண்டுள்ள இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததன் மூலம் ஜிஎம் கிள்ளான் நிறுவனம் சுதந்திர மாதத்திற்கு மதிப்பளிக்கின்றது.

இது குறித்து பேசிய ஜிஎம் கிள்ளான் மொத்த விற்பனை மையத்தின் முத்திரை தொடர்புப் பிரிவு முதன்மை நிர்வாகி நோர் சுஹைடா, இவ்வாண்டு இந்தச் சிறப்பு நிகழ்ச்சி மாறுபட்டதாக அமைந்துள்ளது.

66ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்திற்கு ஏற்ப இதில் இடம்பெறும் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் 66 பரிசுகளை வழங்குகின்றோம். அதில் குறிப்பாக 'Merdeka 66 Kapsul' எனும் பிரத்தியேக அங்கம் இடம்பெற்றுள்ளது. அதில் வாடிக்கையாளர்கள் செப்டம்பர் 3, 4ஆம் தேதிகளில் 2 ரசீது இணைப்புகள் வாயிலாக 250 ரிங்கிட்டிற்கும் மேற்பட்ட விலையில் பொருட்களை வாங்கி இருந்தால் அவர்களுக்குக் கவர்ச்சிகரமான பரிசுகள் கிடைக்கக்கூடிய வாய்ப்புள்ளது என்றார் அவர்.

இந்நிலையில் ஜிஎம் கிள்ளான் விற்பனை மையத்திற்கு வரும் வாடிக்கையாளர்கள் நம் நாட்டின் பாரம்பரிய கலாச்சாரம் குறித்து அறிந்து கொள்வதற்கு இந்தக் குறிப்பிட்ட இரு நாட்களில் மலேசியாவில் உள்ள பல இனத்தவர்களின் பாரம்பரிய நடனம், பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெறும்.

தொடர்ந்து சிலாங்கூர் மாநில மலாய்க் கலாச்சார, பாரம்பரிய வாரியத்தின் அடாட் டான் வாரிஸ் சித்திரக்கதையின் 2 சிறப்பு கதா பாத்திரங்களும் (ஜினா, மாட்) மாஸ்கோட் மக்களை மகிழ்விப்பர்.

இந்தப் பிரத்தியேகப் பிரச்சாரத்தை ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிகள், நடவடிக்கைகள் அனைத்தும் ஜிஎம் கிள்ளான் வாடிக்கையாளர்கள் மட்டுமல்லாது சுற்றுவட்டார மக்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அனைவரும் ஒன்றாக இணைந்து சுதந்திர தினத்தைக் கொண்டாடும் வகையில் பொது மக்கள் இந்த இரு நாட்களில் இந்நிகழ்ச்சியில் பங்கேற்க அழைக்கப்படுகின்றனர்.




